# IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE (FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

## DEPOSITION OF WITNESS

OS.NO.38/2021

P.W.1-SHANTHINI @ CHARULATHA, W/O.BALAJI

DATE:29.09.2022

**வா.சா.1 மீண்டும் அழைக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை.**

**தற்போது என்னிடம் காட்டப்படும் பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையொப்பம் என்னுடையது தான் என்றால் சரிதான். அந்த பிரமாண வாக்குமூலத்தில் என்ன கேட்டு தாக்கல் செய்துள்ளேன் என்றால் என்னுடைய குழந்தைக்காக என்னுடைய கணவரிடமிருந்து சொத்தில் பங்கு கேட்டு வழக்கை தாக்கல் செய்துள்ளேன். பிரமாண வாக்குமூலத்தில் சொத்து குறித்த எந்தவொரு அட்டவணையோ விவரமோ இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள தாவாவில் 3 அயிட்ட சொத்துக்கள் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். அதில் 1 மற்றும் 2 அயிட்ட சொத்துக்கள் பிரதிவாதிக்கும் அவரின் சகோதரர்கள் பாஸ்கர் மற்றும் பிரபாகர் ஆகியோர்களுக்கிடையே ஆவணப்படி 25.01.2021 அன்று பாகப்பிரிவினை செய்யப்பட்டு பத்திரப்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்டது என்றால் சரிதான். பிரதிவாதியின் பாகம் அவரின் சுய உடமை பாகம் என்றால் சரிதான். பாலாஜியின் அப்பா பெயர் என்னவென்றால் நடராஜ செட்டியார். பிரதிவாதியின் அப்பாவிற்கு எத்தனை மனைவிகள் என்றால் 2 மனைவிகள். பிரதிவாதியின் அப்பா நடராஜின் முதல் மனைவி பெயர் என்னவென்றால் கமலா. அந்த கமலா தற்போது எங்குள்ளார் என்றால் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. நடராஜன் மற்றும் கமலாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் 2 ஆண் பிள்ளைகள். அவர்கள் பெயர் பிரபாகரன், பாஸ்கர். வேறு வாரிசுகள் உள்ளார்களா என்றால் எனக்கு தெரிந்து இவர்கள் 2 பேர் மட்டும் தான். பிரதிவாதியின் தகப்பனாருக்கு யசோதா என்ற மனைவி இருந்தாரா என்றால் ஆமாம். அவர் என்னுடைய மாமியார். என்னுடைய மாமியார் பெயர் யசோதா என்றும் சொல்லுவார்கள், வசந்தி என்றும் சொல்லுவார்கள். யசோதம்மாள் தற்போது எங்குள்ளார் என்றால் அவர் இறந்துவிட்டார். எனக்கு திருமணம் ஆகும்போதே அவர் உயிருடன் இல்லை. அவர் எப்போது இறந்தார் என்று எனக்கு தெரியாது. நடராஜன் மற்றும் யசோதாவிற்கு எத்தனை வாரிசுகள் என்றால் பாலாஜி ஒருவர் தான். ஒரு பெண் குழந்தை இருந்தது என்றும் அது இறந்துவிட்டது என்றும் என் கணவர் சொன்னார். நடராஜன் மற்றும் வசந்தி என்பவருக்கும் எத்தனை வாரிசுகள் என்றால் பாலாஜி தான் வாரிசு. யசோதா, வசந்தி என்பவர்கள் இரு வேறு நபர்கள் என்றால் சரியல்ல. இருவரும் ஒரு நபர் தான். யசோதா என்ற நபரும், வசந்தி என்ற**

நபரும் இரு வேறு நபர்கள் என்றால் இல்லை. என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் வாதியின் தாத்தா நடராஜன் என்று குறிப்பிட்டுள்ளது யார் என்றால் என்னுடைய மாமனார். அதாவது பிரதிவாதி பாலாஜியின் அப்பா என்றால் சரிதான். என்னுடைய பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 4ல் குறிப்பிட்டுள்ள வாதியின் தாத்தா நடராஜனின் மனைவி பட்டம்மாள் என்று குறிப்பிட்டுள்ள பட்டம்மாள் தற்போது எங்குள்ளார் என்றால் அவர் இறந்துவிட்டார். அவர் எப்போது இறந்தார் என்றால் 2010ல் இறந்துவிட்டார். அந்த பட்டம்மாளுக்கு எத்தனை வாரிசுகள் என்றால் 4 மகன்கள், 5 பெண்கள். நடராஜனின் இறப்பு சான்றிதழ் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நடராஜனின் மனைவிகள் குறித்தும், அவர்களின் இறப்பு சான்றிதழ்கள் குறித்தும் நீதிமன்றத்தில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நடராஜன் இறந்தப்பிறகு அவருக்கு மொத்தம் எத்தனை வாரிசுகள் உள்ளார்கள் என்பது குறித்து வாரிசு சான்றிதழ் தாக்கல் செய்யவில்லை என்றால் என்னுடைய வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். நடராஜன் மற்றும் அவரின் மனைவிகளின் இறப்பு சான்றிதழ் மற்றும் வாரிசு சான்றிதழ் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நீதிமன்றத்தில் உள்ளதா இல்லையா என்று எனக்கு தெரியாது. பிரதிவாதி பாலாஜியிடம் ஜீவனாம்சம் கேட்டு சென்னை 5வது கூடுதல் குடும்பநல நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எவ்வளவு தொகை ஜீவனாம்சமாக கேட்டு தாக்கல் செய்தேன் என்றால் எனக்கும் என் மகனுக்கும் சேர்த்து மாதம் ரூ.30 ஆயிரம் கேட்டு தாக்கல் செய்துள்ளேன். அந்த மனுவில் பிரதிவாதி பாலாஜி வீடியோகிராப் தொழில் செய்கிறார் என்றும் மாதம் ரூ.1 லட்சம் சம்பாதிக்கிறார் என்றும் கூறியுள்ளேன் என்றால் வீடியோகிராப் தொழில் செய்கிறார் மட்டும் தான் குறிப்பிட்டுள்ளேன். அந்த மனுவில் மாத சம்பளம் எவ்வளவு என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் மாத சம்பளம் குறித்து நான் சொல்லவில்லை. வீடியோகிராப் தொழிலை 20 வருடங்களாக செய்து சுய தொழில் மூலம் வருமானம் சம்பாதித்து வருகிறார் என்றால் சரிதான். தற்போது வேறு தொழில் செய்து வருகிறார். எனக்கும் பாலாஜிக்கும் ஏற்பட்ட குடும்ப பிரச்சனை காரணமாக வேலூர் சார்பு நீதிமன்றத்தில் விவாகரத்து ஆகிவிட்டது என்றால் ஒருதலைபட்ச தீர்ப்பாகி உள்ளது. 2015லிருந்து நான் என்னுடைய அம்மா வீட்டில் தான் வசித்து வருகிறேன் என்றால் சரிதான். விவாகரத்திற்கான ஒருதலைபட்ச தீர்ப்பை ரத்து செய்யவோ அல்லது மேல்முறையீடு செய்யவோ நான் எந்தவொரு நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். விவாகரத்திற்கு பிறகு மேல்முறையீட்டு காலத்திற்கு பிறகு பிரதிவாதி கோமதி என்ற பெண்ணை முறைப்படி திருமணம் செய்து பதிவு அலுவலகத்தில் திருமணத்தை பதிவு செய்துள்ளார் என்றால் முறைப்படி செய்யப்பட்டதா என்று எனக்கு தெரியாது. ஆனால் திருமணம் ஆனது எனக்கு தெரியும். பிரதிவாதிக்கும் கோமதிக்கும் 2 ஆண்பிள்ளைகள் பிரத்திஷ்வரன், கிருத்திஷ்வரன் என்ற பிள்ளைகள் உள்ளார்கள் என்றால் சரிதான். தாவாவில் குறிப்பிட்டுள்ள 3வது அயிட்ட சொத்து பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்து

என்றால் இல்லை. பிரதிவாதி இன்றைய தேதி வரை வீடியோகிராப் தொழில் தான் செய்து வருகிறார் என்றாலும் அந்த தொழிலில் அவருக்கு போதிய வருமானம் உள்ளதால் தான் 3வது அயிட்ட சொத்தை கிரையம் பெற்றுள்ளார் என்றால் சரியல்ல. அது என் மாமனார் சொத்திலிருந்து தான் வாங்கப்பட்டது. அவ்வாறு என் மாமனார் சொத்திலிருந்து வாங்கப்பட்டது என்பதை பிரதிவாதி மறுக்கிறார் என்றால் சரியல்ல. கடந்த 2015ஆம் ஆண்டில் எனக்கும் பிரதிவாதிக்கும் பிரச்சனை ஏற்பட்டு பிரதிவாதியின் தற்போதைய மனைவி கோமதி காட்பாடி காவல் நிலையத்தில் பிரச்சனை சம்பந்தமாக என் மீதும் என் தாயார் மீதும் ஒரு புகார் கொடுத்துள்ளார் என்றால் சரிதான். அந்த புகாரின் பேரில் என்னையும் என் தாயாரையும் மற்றும் பிரதிவாதியையும் கோமதியையும் அழைத்து விசாரணை செய்து பிரதிவாதிக்கும் கோமதிக்கும் உள்ள வாழ்க்கையில் தலையிடக்கூடாது என்று என்னிடம் எழுதி வாங்கினார்கள் என்றால் இல்லை. அறிவுரை கூறி அனுப்பி வைத்தார்கள். நானும் என் தாயாரும் காவல் நிலையத்தில் எழுதி கொடுத்து கையொப்பம் போட்டு கொடுத்துள்ளோம் என்றால் இல்லை. இந்த வழக்கில் பிரதிவாதியின் முறைப்படி வாரிசுகளான பிரத்திஷ்வரன், கிருத்திஷ்வரன் இவ்வழக்கில் தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கு முறைப்படியான வாரிசுகள் எத்தனை பேர் உள்ளார்கள் என்று தெரிந்து அந்த முறையான வாரிசுகளை இவ்வழக்கில் பிரதிவாதிகளாக சேர்க்க நான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றால் சரிதான். அதனால் இந்த காரணத்திற்காக தாவா நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. என்னுடைய மகன் கோகுல்நாத்தின் பிறப்பு சான்றிதழை இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். ஆனால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன். 27.01.2010ல் நடராஜன் கிரைய பத்திரத்தில் கிரைய தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 28.01.2010ல் புஷ்பா என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தில் கிரைய தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். 28.01.2010ல் சுகுணா என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தில் கிரைய தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. 28.01.2010ல் விஸ்வநாதன் என்பவருக்கு கிரையம் கொடுத்த கிரைய பத்திரத்தில் கிரைய தொகை எவ்வளவு என்று எனக்கு தெரியாது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. 4 கிரையப்பத்திரங்களில் குறிப்பிட்டுள்ள ரூ.75 லட்சம் கற்பனையானது என்றால் இல்லை. எனக்கு கிரைய தொகை எவ்வளவு என்று தெரியாது என்றாலும் நான் கற்பனையாக வழக்கிற்காக கூறியுள்ளேன் என்றால் சரியல்ல. எனக்கு சரியாக ஞபாகமில்லை. கிரைய பத்திரங்கள் அனைத்தும் 2010ல் ஏற்படுத்தப்பட்டது என்றால் சரிதான். 2010ல் எனக்கும் பிரதிவாதிக்கும் எந்தவொரு சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2 முதல் 4 ஆவணங்கள் மற்றும் அதில் குறிப்பிட்டுள்ள சொத்துக்கள் மற்றும் இதர சொத்துக்களும் 1996லேயே பிரதிவாதி பாலாஜிக்கும் அவரது சகோதரர்களான பாஸ்கர் மற்றும் பிரபாகர் ஆகியோர்களுக்கிடையே பாகப்பிரிவினை செய்யப்பட்டுவிட்டது என்றால் சரியல்ல. 1996ல் நடந்த பாகப்பிரிவினையை குறித்து எனக்கு தெரியாது என்றால் சரியல்ல.

**பிரதிவாதி பாலாஜியின் சகோதரர் பாஸ்கர், பிரபாகர் ஆகியோர்களை நான் இவ்வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். தாவாவில் குறிப்பிட்டுள்ள 3 அயிட்ட சொத்தை பிரதிவாதி எந்த மூலத்தில் இருந்து வாங்கினார் என்பதை நிரூபிக்க ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். வாதி கேட்டப்படி தாவா அயிட்ட 1, 2 அயிட்ட சொத்துக்களில் சட்டப்படி பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. எனக்கும் பிரதிவாதிக்கும் இடையே விவாகரத்து நடக்கும்போதே பிரதிவாதி எனக்கு பணம் செட்டில் செய்துவிட்டார் என்றாலும் அதனால் தான் நான் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரியல்ல. நடராஜனின் முறையான வாரிசுகள் பற்றியும் சொத்துகள் பற்றியும் எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரியல்ல. தாவாவில் குறிப்பிட்டுள்ள 3 அயிட்ட சொத்துக்களில் சர்வே எண்ணோ விஸ்தீரணமோ எனக்கு தெரியாது என்றால் எனக்கு ஞாபகமில்லை. தாவாவில் குறிப்பிட்டுள்ள 1, 2 அயிட்ட சொத்து ஏற்கனவே பாகம் பிரிக்கப்பட்டுள்ளதால் அந்த சொத்தில் நான் பாகம் கேட்க முடியாது என்றால் சரியல்ல. தாவா 3 அயிட்ட சொத்து பிரதிவாதியின் சுயசம்பாத்திய சொத்து என்பதால் வாதி கோகுல் எந்த பாகமும் கோரமுடியாது என்றால் சரியல்ல. தாவா சொத்துக்களுக்கும் இந்த வழக்கிற்கும் எந்த சம்பந்தமும் இல்லை என்றாலும் தாவா தள்ளுப்படி செய்யப்பட வேண்டுமென்றாலும் சரியல்ல.**

**என்னால் நேரடியாக தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியிடம் படித்து காட்டி சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டு சாட்சியால் கையொப்பம் செய்யப்பட்டது.**

P REVATHY

Digitally signed by P REVATHY
Date: 2022.09.29 17:17:40 +0530

**கூடுதல் மாவட்ட நீதிபதி,**
**(விரைவு நீதிமன்றம்),**
**வேலூர்.**